**கவனிக்க.**- *2016.09.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1984 - 2016 සැප්තැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2016.09.09

*1984 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1746 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1750 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 1758 |


**கவனிக்க.**- மருத்துவம் (திருத்தம்) சட்டமூலம் 2016, யூன் மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

**பண்டாரகமை பிரதேச சபை**

மேல் மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடம்

2016, ஓகத்து 5 ஆந் திகதிய 1979 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (ஆ) இல் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட அறிவித்தலில் கல்வித் தகைமைகள் பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும் என்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதி 30.09.2016 ஆந் திகதி வரை நீடிக்கப்படல் வேண்டுமென திருத்தி வாசிக்கப்படுதலும் வேண்டும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | சம்பள அளவுத்திட்டம் | பதவிகளின் எண்ணிக்கை | கல்வி மற்றும் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக அலுவல் உதவியாளர் | ரூபா 24,250-10X250-10X270-10X300-12X330-ரூபா 36,410 | 01 | க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (இதில் ஐந்து (05) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.) |

என். டி. ஐ. சுவர்ணா கே. பெரேரா,
செயலாளர்,
பண்டாரகமை பிரதேச சபை.

பண்டாரகமை பிரதேச சபை,
பாணந்துறை வீதி,
பண்டாரகமை,
2016, ஓகத்து 22.

9-409

---

**கம்பளை நகர சபை**

கம்பளை நகர சபையின் ஆரம்பத்தர தேர்ச்சியற்ற நிறுவகப் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

கம்பளை நகர சபையில் நிலவும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கென அவ் அட்டவணையில் தரப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழிற் தகைமைகளைக் கொண்ட கம்பளை நகர சபையின் நிருவாக எல்லைக்குள் வசிப்போரிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் அனுபவம் |
|---|---|---|---|
| வாகன ஓட்டுநர் தரம் III<br><br>(மோட்டார் வாகனம்/திராக்டர்/ லொரி) | | **சம்பளக் குறியீடு** :<br>PL 3 -2006<br><br>**சம்பள அளவுத் திட்டம்** :<br>ரூபா 12,470-10×130-10×145-10×160- 12×170- ரூபா 18,860<br><br>முதல் நியமனத் திகதியிலிருந்து ரூபா 12,470 ஆன ஆரம்ப சம்பள அடிப்படையிலிருந்து சம்பளம் வழங்கப்படும். | இரு அமர்வுகளுக்கு மேற்படாது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் 2 திறமைச் சித்திகள் உட்படக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றில் ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்; அத்துடன்<br><br>தொழிலுடன் தொடர்பான தகைமைகளான ஒவ்வொரு பதவிக்கான வகுதியின் மோட்டர் வாகனம் செலுத்துவதற்கு மோட்டார் வாகன |

| பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் அனுபவம் |
|---|---|---|---|
| | | | ஆணையாளர் வழங்கிய மோட்டார் வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் மற்றும், ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் குறைந்தது 3 வருடகால அனுபவம் பெற்றிருத்தல். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்).<br><br>**உடற் தகைமைகள் :**<br>1. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பகல், இரவு வேளைகளில் சேவையில் ஈடுபடுவதற்குரிய சிறந்த கண்பார்வையும் தேவையான அளவு உடல் மற்றும் உளத் தகைமையும் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>2. ஆகக்குறைந்த உயரம் 5 அடி 2 1/ 2 அங்குலமாக இருத்தல் வேண்டும்.<br><br>3. வீதிப் போக்குவரத்து விதிகள் பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.<br><br>4. அடிப்படைத் தகைமைகளைப் பெறுவோர் கட்டமைப்பான மற்றும் எழுத்துப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். |
| மேசன் II | 01 | **சம்பளக் குறியீடு :**<br>PL 2 -2006<br><br>**சம்பள அளவுத் திட்டம் :**<br>ரூபா 12,210-10×130-10×145-10×160- 12×170- ரூபா 18,600<br><br>முதல் நியமனத் திகதியிலிருந்து 12 ஆவது சம்பள அடிப்படையிலிருந்து ரூபா 13,655 ஆன சம்பளம் வழங்கப்படும்.<br><br>(4 ஆவது சம்பள உயர்ச்சிக்கு முன்னர் தடைதாண்டல் உண்டு) | இரு அமர்வுகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சையில் (சா.த.) சிங்களம், தமிழ்மொழி உட்படக் குறைந்தது 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அத்துடன்,<br><br>தேசிய தொழில்சார் தகைமையின் தொழில் தொடர்பான 2 ஆவது மட்டம் (NVQ2) அல்லது 3 ஆவது மட்டச் (NVQ3) சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது,<br><br>தேசிய தொழிற் பயிற்சித் திணைக் களத்தின் (DTET) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது, |

| *பதவிப் பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *சம்பள அளவுத் திட்டம்* | *கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் அனுபவம்* |
|---|---|---|---|
| | | | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSC) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்<br>அல்லது<br>இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபையில் (VTA) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாட நெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்<br>அல்லது<br>தேசிய தொழில் பயிலுநர் மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்<br>அல்லது<br>மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுபெற்ற தொழிற் பயிற்சி நிறுவனமொன்றில் தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>**அனுபவம்** :<br>உரிய துறையில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (பயிற்சிக் காலம் ஆகக் குறைந்தது 02 வருடமேனும் இருத்தல் வேண்டும்.) |

**3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.-**

3.1 இந்தப் பதவிகள் நிரந்தரமானவை, ஓய்வூதிய உரித்துடையவை.

3.2 விதவைகள் மற்றும் அநாதைகள் சகாய நிதிக்கும் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கும் பங்களிப்பு செய்தல் வேண்டும்.

3.3 தெரிவு செய்யப்படுவோர் 3 வருடகால தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுதல் வேண்டும்.

3.4 இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், அரச திணைக்களங்களது கட்டளைகளுக்கும், அரசாங்க மற்றும் மத்திய மாகாண சபை ஆணைக்குழு மற்றும் சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும்.

**4. ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஏனைய தகைமைகள்.-**

(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(2) விண்ணப்பதாரி கம்பளை நகர சபையின் எல்லைக்குள் வதிபவராக இருத்தல் வேண்டும். (விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னரான 3 வருட காலம் இந்த எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.)

(3) விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் அல்லது ஏதேனும் மாகாண அரச சேவையில் பதவி வகிப்போர் தொடர்பில் உச்ச வயதெல்லை பொருந்தாது).

(4) கம்பளை நகர சபையில் தற்போது தற்காலிக/சமயோசித/பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

(5) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(6) விண்ணப்பதாரிகள் முறையான நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டு தகைமைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

(7) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது.

(8) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் தகுதியானோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(9) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், தாமதப்படுத்தும் அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் கம்பளை நகர சபையின் செயலாளருக்கு உண்டு.

5. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.-**

இந்த அறிவிப்பில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாக ஏ4 அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2016.09.30 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், கம்பளை நகர சபை, கம்பளை" என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் பணிபுரிவோரது விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவரூடாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்) உரிய திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ்கள் ;
(3) தேசிய அடையாள அட்டையின் பிரதி ;
(4) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரது சான்றிதழ் ;
(5) அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் ;
(6) தொழில் மற்றும் அனுபவச் சான்றிதழ்கள்.

எம். ஏ. காமினி ஜயவிக்ரம,
செயலாளர்,
கம்பளை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
கம்பளை,
2016, ஓகத்து 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரச சேவையின் கம்பளை நகர சபை .............. பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :-----.
3. நிரந்தர முகவரி :-----.
4. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
6. பிறந்த திகதி : ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
7. விண்ணப்ப முடிவுத் திகதியில் உள்ளவாறான வயது :
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. ஆண்/பெண் :-----.
9. விவாகமானவர்/தனித்தவர் :-----.
10. வம்சாவழியினாலா பதவினாலா இலங்கைப் பிரசை :-----.
11. கல்வித் தகைமைகள் :-----.
12. ஏனைய தகைமைகள் :-----.
13. ஏற்கனவே இந்த நகர சபையில் சேவையில் ஈடுபட்டுள்ளவரெனின்
    1. தற்போது வகிக்கும் பதவி :-----.
    2. நிரநதரம்/சமயோசிதம்/தற்காலிகம்/ஒப்பந்தம்/பதிலீடு :-----.
    3. அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
14. எப்போதாயினும் ஏதேனும் குற்றம் ஒன்றுக்கு நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :-----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்தக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**தற்போது அரச சேவையிலுள்ளோருக்கான திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி /செல்வி ..................... என்ற விண்ணப்பதாரி இந்த நிறுவனத்தில் ......... ஆகப் பணியாற்றுகிறார். இநதப் பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்வகையிலான தண்டத்துக்கும் உட்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தை பரிந்துரை செய்கின்றேன்.

------,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
பதவி முத்திரை :-----.

9-470

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மெதகம பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 139 ஆம் பிரிவினால் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மெதகம பிரதேச சபை மூலம் இங்கு, கீழ் குறிப்பிடப்பட்ட நிர்ணயத்தை செயற்படுத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென பொது மக்களுக்கு அறிவித்தல் செய்யப்படுகிறது.

ஏ. எம். ஹேமரத்ன பண்டார,
சபை செயலாளர்,
மெதகம பிரதேச சபை.

2016, ஓகத்து 10.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 139 ஆம் பிரிவினால் பிரதேச சபைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மெதகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வரிப்பணம் செயற்பாட்டிற்காக வீடு, கட்டிடம், காணி அல்லது தோட்டத்தினது வருடாந்த பெறுமதியை நிர்ணயம் செய்யும் செயற்பாட்டிற்காகவும் அல்லது ஏக்கர் வரி செயற்பாட்டிற்கும் ஏதேனும் பயிரிடப்பட்ட காணியின் விஸ்தீரணத்தை நிர்ணயிப்பதற்கும் குறிப்பிட்டதொரு சொத்துரிமையாளருக்கும், வசிப்பவருக்கும் அதன் வாடகை அல்லது வருட பெறுமதி அல்லது விஸ்தீரணம் பற்றிய தவணை அறிக்கை சமர்ப்பிக்க கட்டளை பிறப்பிக்கப்படுதல் அச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவால் குறிப்பிட்ட பிரதேச சபையின் செயலாளர் என்ற வகையில் நான் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் இத்தால் தீர்மானிக்கின்றேன்.”

9-219

## அகலவத்த பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1)(அ) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவிற்கு ஏற்ப, மேல் மாகாண சபையின் களுத்துறை மாவட்டத்தின் அகலவத்த பிரதேச சபையினால் இங்கு பின்வருமாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தெருக்கள் அகலவத்த பிரதேச சபைக்குரித்தான தெருக்களாகுமென அறிவிக்கப்படுவதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*இது தொடர்பாக பிரதேசத்தின் பொதுமக்களால் அல்லது தெருக்களுக்குரிய காணிகளுக்கு உரிமையாளாராக உரித்தைக் கொண்டுள்ள தரப்பினர்களால் ஏதேனும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட வேண்டியிருப்பின், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாதத்திற்குள் தமது உரிமையை நிரூபிப்பதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2)ஆம் பிரிவிற்கு இணங்க செயற்படுமாறு இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

குறித்த காலப்பகுதிக்குள் எந்தவோர் எதிர்ப்பும் சமர்ப்பிக்கப்படாதவிடத்து அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தெருக்கள் அகலவத்த பிரதேச சபைக்குரித்தான தெருக்களாக அங்கீகரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் என்பதை மக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு இத்தால் அறிவிப்புச் செய்கின்றேன்.

லலினி தீபிக்கா உடுமுல்ல,
செயலாளர் மற்றும் சபையின் அதிகாரமிகு பணிகள்
மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும்
உத்தியோகத்தர்,
அகலவத்த பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அகலவத்த,
2016, ஓகத்து 23.

### பாதை அட்டவணை - அகலவத்த பிரதேச சபை

| தொடர் இல. | பாதையின் பெயர் | நீளம் (கி.மீ.) | அகலம் (மீ.) |
|---|---|---|---|
| 01. | கெவிட்டியாகல டெனி விஜேதிலக்க மாவத்தையில் 200 மீற்றர் அளவு செல்லும் போது திரு கே.வீ. சிமியொன் அவர்களின் வீட்டுக்கு முன்னால் ஆரம்பித்து திரு.கே.வீ. திலக்கரத்ன அவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் முடிவடையும் வீதி. | 0.389 | 3.05 |
| 02. | கெவிட்டியாகல டெனி விஜேதிலக்க மாவத்தையில் ஆரம்பமாகி மஹமெவுனா விகாரைக்கு அருகில் முடிவடையும் வீதி. | 0.272 | 3.65 |
| 03. | அகலவத்த - மத்துகம பிரதான வீதியில் ஆரம்பமாகி திரு. உபாலி சல்ஹாது அவர்களின் காணியில் முடிவடைகின்ற வித்தானகே வீதி. | 0.125 | 3.05 |
| 04. | அகலவத்த - ஓமத்த வீதியில் ஆரம்பமாகி திரு. பீ.கே. சந்தன குமார அவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் முடிவடையும் தெய்யன்கொடவத்த வீதி | 0.168 | 4.57 |
| 05. | கொறக்ககொட தெபரஹேண வீதியில் ஆரம்பமாகி திருமதி வீ.கே.டீ. நிரோஷனி பெரேரா அவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் முடிவடையும் வீதி. | 0.037 | 3.05 |
| 06. | கொறக்கொட மார்டின்வத்த வீதியில் ஆரம்பமாகி அட்டிகொடிபொல நெல்வயலில் முடிவடையும் வீதி. | 0.078 | 3.65 |

| *தொடர் இல.* | *பாதையின் பெயர்* | *நீளம் (கி.மீ.)* | *அகலம் (கி.மீ.)* |
|---|---|---|---|
| 07. | கிரிகொல கண்டகல வீதியில் ஆரம்பமாகி திரு. வீ. எம். ஏ. ஜினசேன அவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் முடிவடையும் கெட்டகரல்லகஹவத்த வீதி. | 0.18 | 3.05 |
| 08. | உடவெல விலேகொட வீதியில் ஆரம்பமாகி திரு. வீ. ஏ. விஜேசிங்ஹ அவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் முடிவடையும் வீதி. | 0.086 | 3.05 |
| 09. | உடவெல விலேகொட வீதியில் ஆரம்பமாகி திருமதி. வீ. நயனி சத்துரிக்கா அவர்களின் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள முடிவடையும் ஏலமிடப்படும் காணி வீதி. | 0.099 | 4.57 |
| 10. | உடவெல கண்டகல வீதியில் ஆரம்பமாகி திருமதி வீ. டி. ஏ. டி. சி. குலத்துங்க அவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் முடிவடையும் வீதி. | 0.27 | 3.05 |
| 11. | உடவெல பீல்லஹேன வீதியில் ஆரம்பமாகி திரு. வீ. பீ. வி. பிரேமதாஸ அவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் முடிவடையும் வீதி. | 0.171 | 3.65 |
| 12. | கொறக்ககொட மார்டின்வத்த யடியன வீதியில் ஆரம்பமாகி திரு. நிமல் விஜேநாயக்க அவர்களின் வீட்டுக்கு முன்னால் முடிவடையும் வீதி. | 0.1 | 3.65 |
| 13. | ஹெலம்ப மில்லகஹவத்த வீதியில் ஆரம்பமாகி திரு. டி. ட. வசந்த அவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் முடிவடையும் கொடேவத்த வீதி. | 0.4 | 4.57 |
| 14. | தியபத்துகம ஜலகந்த வீதியில் ஆரம்பமாகி திருமதி குணவத்தி வெல்கம அவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் முடிவடையும் ஜலகந்த பீல்லஹேன வீதி. | 0.15 | 3.05 |
| 15. | ஹெலம்ப வெலிகொடல்ல கல்கந்த முதுனயில் ஆரம்பமாகி திரு. சுஜீவகுமார அவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் முடிவடையும் ஹெலம்ப கல்கந்தைக்குக்கு அருகிலுள்ள வீதி | 0.095 | 3.05 |

9-308

---

**மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை மதிப்பீட்டு வரிக் கருமங்கள் தொடர்பில் கீழே காட்டப்பட்டுள்ள விதிப்புகளைத் தீர்மானித்துள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறிவித்தல் தரப்படுகின்றது. இந்த மதிப்பீட்டு வரி விதிப்புக் கருமங்களைத் தீர்மானிப்பதற்கென மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆவது பிரிவின் கீழ் நிறைவு செய்துள்ளதென்பதை மேலும் அறிவித்துக்கொள்கின்றேன்.*

சீ. பி. நவரத்ன,
செயலாளர்,
மஹநுவர கடவத் சத்தர மற்றும்
கங்கவட்ட கோறளே பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே,
2016, ஓகத்து 18.

## தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, கண்டி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரது அங்கீகாரத்துடன், மஹநுவர கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் விருத்தியடைந்த பகுதி/பகுதிகளாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசத்தில்/ பிரதேசங்களில் அமைந்துள்ள அசையாச் சொத்துக்களதும் அந்தந்த வகைக்கும் தரத்துக்கும் உரிய அசையாத சொத்துக்களது ஆண்டுப் பெறுமதியைக் குறித்த சட்டத்தின் 146 ஆவது பிரிவின் நியமங்களுக்கமைய விதிப்பதற்கும்.*

*குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறித்த அசையாச் சொத்துக்களில் அமைந்துள்ள வயல் நிலங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வீடுகள், கட்டடங்கள், காணிகள், வீட்டுத்தொடர்களின் ஆண்டுப் பெறுமதியின், பின்வரும் I, II, III, IV, V மற்றும் VI அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்கான வீதத்திலான மதிப்பீட்டு வரியை 2018 ஆம் ஆண்டுக்கென விதிப்பதற்கும்,*

*குறித்த மதிப்பீட்டு வரியை மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுடன் முடிவடையும் காலாண்டுக்குள் மேற்காட்டிய ஆண்டில் நான்கு சமமான தவணைகளில் செலுத்துதல் வேண்டும் என 134 ஆவது பிரிவின் (6) ஆவது உப பிரிவின் கீழ் விதிப்பதற்கும், குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவின் கீழ் குறித்த பிரதேச சபையின் செயலாளர் என்ற வகையில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இத்தால் தீர்மானம் செய்கின்றேன்.*

### அட்டவணை - I

**அம்பிட்டிய வலயம்**

| தொடர் இல. | பாதையின் பெயர் | எல்லைகள் பற்றிய விபரம் | சதவீதம் |
|---|---|---|---|
| 01 | மீகனுவ பன்சல வீதி | மீகனுவ பஸ் தரிப்பிடத்திலிருந்து இடதுபுறப் பாதையில் மீகனுவ பன்சல வரையுமான 400 மீற்றர் | 5% |
| 02 | விக்டோரியா நந்தவனப் பாதை | மீகனுவ பஸ் தரிப்பிடத்தின் அருகில் 2/3 மதகுத் தூணிலிருந்து விக்டோரியா நந்தவனப் பாதையூடாகச் சென்று திகதன்ன பாதையின் இறுதி வரை 500 மீற்றர் | 7% |
| 03 | வெலிகந்த வீதி | மீகனுவ பஸ் தரிப்பிடத்தின் அருகிலிருந்து வெலிகந்த வீதியின் இறுதி வரை 150 மீற்றர் | 7% |
| 04 | திகதன்ன வீதி | குருதெனிய பிரத்திபா மாவத்தையிலிருந்து திகதன்ன பாதையின் 706/3 இலக்கத்திலுள்ள கடை வரை 800 மீற்றர் | 6% |
| 05 | வலகம்மெத்த கோன்கும்புற பாதை | அம்பிட்டிய பிரதான பாதையிலிருந்து வலகம்மெத்த வீதியிலுள்ள முச்சந்தியின் வலதுபுறுத்தில் கோன்கும்புற வரை 800 மீற்றர் | 7% |
| 06 | வலகம்மெத்த மீகனுவ வீதி | அம்பிட்டிய பிரதான வீதியிலிருந்து வலகம்மெத்த பாதையில் திரும்பி எதிர்ப்படும் முச்சந்தியின் இடதுபுறம் திரும்பி மீகனுவ தமிழ் வித்தியாலயம் வரை 800 மீற்றர் | 7% |
| 07 | மெத்தேபத்தன கொலனி வீதி - புதிய | மேத்தேபத்தன கொலனி வீதியில் JMC நிறுவனத்தில் ஆரம்பித்து நீர்த்தாங்கி வரை 1 km | 6% |
| 08 | வெவதன்ன வீதி | வெவதன்ன வீதியில் தற்போதைய மதிப்பீட்டு வரி எல்லையிலிருந்து காணப்படும் அனைத்து இடைப் பாதைகளும் | 6% |
| 09 | பூலியத்த வீதி | தலாத்துஓயா பாதையிலிருந்து பூலியத்த பாதைக்குத் திரும்பும் சந்தியிலிருந்து திரு. எச். பி. ஏக்கநாயக்க என்பவரது வீடு வரை 1 km தூரம் | 6% |
| 10 | ரதாகஸ்பான வீதி | பூலியத்த பாதையிலிருந்து ரதாகஸ்பான பாதை நோக்கித் திரும்பும் சந்தியிலிருந்து புதமவத்த கற்குழிப் பாதை வரை 1 km | 5% |

**அட்டவணை** - II

**மாளிகாதன்ன வலயம்**

| தொடர் இல. | பாதையின் பெயர் | எல்லைகள் பற்றிய விபரம் | சதவீதம் |
|---|---|---|---|
| 01 | எக்கமுத்து மாவத்தை | மவுன்ட் பரடைஸ் சந்தியின் எதிரிலுள்ள இடைப்பாதையிலிருந்து ஆரம்பித்து 600 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மகாவலி கங்கை வரை | 4% |
| 02 | கிறீன் ஹெரிடேஜ் வீட்டுத்திட்டப் பாதை | பிரதான பாதையில் கிறீன் ஹெரிடேஜ் வீட்டுத்திட்டத்தின் அருகில் உள்ள பாதையில் 300 மீற்றர் வரை | 5% |
| 03 | உடதன்ன ஹாரகம வீதி | ஹாரகம பிரதான வீதியின் வலதுபுறத்தில் உள்ள தயா கன்ஸ்ட்ரக்ஸன் வீதியில் 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள முச்சந்தியின் வலதுபுறம் உள்ள பாதையில், உடதன்ன ஹாரகம வீதியில் 2 km வரை | 3% |
| 04 | உடதன்ன குருதெனிய வீதி | ஹாரகம பிரதான வீதியின் வலதுபுறமுள்ள மகாவலி பிஸ் சந்தியிலிருந்து திரும்பி 2 km தூரத்தில் அமைந்துள்ள குருதெனிய பன்சல அருகில் குருதெனிய பாலத்தின் சந்தி வரை | 3% |
| 05 | குருதெனிய தலாத்துஓயா வீதி | குருதெனிய பஸ் தரிப்பிடம் அருகில் இடதுபுறம் உள்ள பாதையில் அமைந்துள்ள பாத்த ஹேவாகற்ற எல்லை வரை 500 மீற்றர் | 5% |
| 06 | தம்பவெல குருதெனிய வீதி | 4/1 பாலத்தின் அருகில் தம்பவெல பாதைக்குத் திரும்பும் சந்தியிலிருந்து 2500 மீற்றர் | 7% |

**அட்டவணை** - III

**குருதெனிய வலயம்**

| தொடர் இல. | பாதையின் பெயர் | எல்லைகள் பற்றிய விபரம் | சதவீதம் |
|---|---|---|---|
| 01 | குட்ஹோப் எஸ்டேட் வீதி | குருதெனிய பிரதான பாதையில் பென்சீஸ் சுப்பர் எதிரில் உள்ள குட்ஹோப் மாவத்தையின் ஆரம்பத்திலிருந்து ரீஜன்சி ஹவுஸ் ஹோட்டல் வரையுள்ள பாதையில் 600 மீற்றர் | 7% |
| 02 | பிரத்திபா மாவத்தை | குருதெனிய பிரதான பாதையில் பிரத்திபா மாவத்தையின் ஆரம்பத்திலிருந்து 1 km தூரம் | 6% |
| 03 | இஹல தென்னேகும்புற வீதி | குருதெனிய பிரதான பாதையில் MOH அலுவலகத்தின் அருகில் மேலே செல்லும் பாதையில் 1800 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இஹல தென்னேகும்புற சனசமூக நிலையம் வரை | 7% |
| 04 | K II பாதை | K II பாதையில் நகர எல்லையிலிருந்து தர்மராஜ மாவத்தையின் நகர சபை எல்லை வரை (பெனராமா ரிசோற் ஊடுபாதையும் உட்பட) | 9% |
| 05 | இஹல தலபியன்னாவ பாதை (முகாந்திரம் வத்த பாதை) | அம்பிட்டிய-குருதெனிய வீதியில் தலபியன்னாவ வீதிப்பலகை அருகில் 300 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சந்தியின் வலதுபுறத்தில் செல்லும் பாதையில் கௌதமாராமய வரை | 6% |
| 06 | பஹல தலபியன்னாவ வீதி | அம்பிட்டிய-குருதெனிய வீதியில் தலபியன்னாவ வீதிக்குத் திரும்பும் சந்தியில் ஆரம்பித்து ரீஜன்சி ஹவுஸ் ஹோட்டல் வரை | 6% |

**அட்டவணை - IV**

**ஹந்தான வலயம்**

| தொடர் இல. | பாதையின் பெயர் | எல்லைகள் பற்றிய விபரம் | சதவீதம் |
|---|---|---|---|
| 01 | ரிச்மண்ட் ஹில் ரெசிடன்ஸ் | பிரதான பாதையிலிருந்து ஆரம்பித்து 700 மீற்றர் வரை | 5% |
| 02 | மொரகொல்லாகம வீதி | ஹந்தான 4 ஆம் மைல்கல் அருகிலிருந்து மொரகொல்லாகம பாதையின் இறுதி வரை 1150 மீற்றர் | 1% |
| 03 | மேல் நீர்த்தடாக வீதி | மேல் நீர்த்தடாகப் பாதையில் பன்சல அருகில் ஆரம்பித்து ஹைலண்ட் ஹோட்டல் வரை 1500 மீற்றர் | 6% |
| 04 | மேல் நீர்த்தடாக சுற்றுவட்ட வீதி | மேல் நீர்த்தடாக வீதியில் ஹெல மாவத்தை ஆரம்ப இடத்திலிருந்து சுற்றுவட்டப்பாதை வனப் பாதுகாப்பு மாவத்தையின் ஆரம்பம் வரை 8500 மீற்றர் | 6% |
| 05 | சாரானந்த வீதி | சாரானந்த சந்தி ஆரம்பத்திலிருந்து கொழும்பு வீதி வரை 900 மீற்றர் | 6% |
| 06 | சுபோதாராம வீதி | சாரானந்த வீதியிலிருந்து திரும்பி சுபோதாராம வீதியில் 700 மீற்றர் | 6% |
| 07 | மகாவலி மாவத்த | கம்பளை வீதி ஆரம்பத்திலிருந்து சாரானந்த வீதி வரை 700 மீற்றர் | 6% |
| 08 | கொடகந்தெனிய வீதி | கொடகந்தெனிய வீதி ஆரம்பத்திலிருந்து யட்டிநுவர பிரதேச சபை எல்லை வரை 700 மீற்றர் | 6% |
| 09 | கற்குழி வீதி கொடகந்தெனிய | கொடகந்தெனிய வீதியில் இருந்து கொழும்பு வீதி வரை 900 மீற்றர் | 6% |
| 10 | மயான வீதி | தங்கொல்ல வீதியில் பிரதேச சபை எல்லையிலிருந்து போவலவத்த வரை | 4% |
| 11 | ஸ்பிரிங்ஹில் வத்த வீதி | வஜிராராம ஆராமை செல்லும் பாதையிலிருந்து ஸ்பிரிங்ஹில்வத்த முடிவு வரை | 3% |

**அட்டவணை - V**

**சரசவிகம வலயம்**

| தொடர் இல. | பாதையின் பெயர் | எல்லைகள் பற்றிய விபரம் | சதவீதம் |
|---|---|---|---|
| 01 | சரசவிகம வீதி | சரசவிகம சனசமூக நிலையம் அருகில் ஆரம்பித்து சரசவிகம வீதி முடிவு வரை 1000 மீற்றர் | 1% |
| 02 | லெஜர்ஸ்ட்ரோமியா ஒழுங்கை | சரசவிகம பிரதான பாதை அருகில் ஆரம்பித்து லெஜர்ஸ்ட்ரோமியா ஒழுங்கை முடிவு வரை 1500 மீற்றர் | 1% |
| 03 | பைனஸ்வத்த வீதி | சரசவிகம பிரதான பாதை அருகிலிருந்து ஆரம்பித்து பைனஸ்வத்த இறுதி வரை 1500 மீற்றர் | 1% |
| 04 | மோபிறே வீதி | பிரதேச சபை நீர்த்தாங்கி அருகில் ஆரம்பித்து மோபிறே வீதியில் இறுதி வரை 1500 மீற்றர் | 1% |
| 05 | சமாதி மாவத்தை | சரசவிகம பிரதான பாதை அருகிலிருந்து ஆரம்பித்து சமாதி மாவத்தையின் இறுதி வரை 1500 மீற்றர் | 1% |

**அட்டவணை - VI**

**ஹாரகம வலயம்**

| *தொடர் இல.* | *பாதையின் பெயர்* | *எல்லைகள் பற்றிய விபரம்* | *சதவீதம்* |
|---|---|---|---|
| 01 | ஹாரகம முதலாம் ஒழுங்கை | ஹாரகம நிம்மி கடை அருகிலிருந்து மகாவலிகங்கை வரையுள்ள பாதையில் (நிம்மி கடையருகிலிருந்து 50 மீற்றர் தூரத்திலுள்ள மதகு அருகிலுள்ள முச்சந்தியின் வலதுபுறம்) 700 மீற்றர் வரை | 4% |
| 02 | ஹாரகம இரண்டாம் ஒழுங்கை | ஹாரகம நிம்மி கடை அருகிலிருந்து 50 மீற்றர் தூரத்திலுள்ள மதகு அருகிலிருந்து இடதுபுறம் உடரட்ட சந்தல்ல வரையுள்ள பாதையின் 2 km | 4% |
| 03 | உடரட்ட சந்தல்ல வீதி | ஹாரகம சந்தியில் சிரிசுமன மாவத்தையிலிருந்து ஆரம்பித்து உடரட்ட சந்தல்ல எல்லை வரையுள்ள பாதையின் 1.3 km தூரம் | 10% |
| 04 | கோணவத்த வீதி | ஹாரகம சந்தியில் சிரிசுமன மாவத்தையிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் இடதுபுறமுள்ள கோணவத்த வீதியில் ஆரம்பித்து மகாவலிகங்கை வரையுள்ள பாதையில் 1600 மீற்றர் | 2% |
| 05 | பாதை இல. 03 | கீத்திகா ஹாட்வெயார் எதிரிலிருந்து ஆரம்பித்து 03 ஆம் இலக்க சுற்றுவட்ட வீதியில் 2.5 கி. மீற்றர் தூரம் | 1% |
| 06 | மாளிகாதன்ன வத்த வீதி | ஹாரகம பிரதான பாதையில் மவுன்ட் பரடைஸ் சந்தியின் ஆரம்பத்திலிருந்து மாளிகாதன்னவத்த வீதியில் சந்தன செவன வீடு வரையுள்ள 800 மீற்றர் தூரம் | 4% |
| 07 | சிங்காரகம வீதி | ஹாரகம சந்தியிலிருந்து ஆரம்பித்து சிங்காரகம வீதியில் கிராம அலுவலரது அலுவலகம் அருகிலுள்ள பாலம் வரையுள்ள 1000 மீற்றர் வரை | 4% |
| 08 | பாதை இல. 04 | ஹாரகம சந்தியில் ராஜா கடையருகில் ஆரம்பித்து 700 மீற்றர் தூரத்திலுள்ள முச்சந்தியில் இடதுபுறமுள்ள பாதையில் 4/64 டி சமுத்ரா நிவச வரையுள்ள பாதையில் 1500 மீற்றர் அத்துடன், மேற்குறித்த 700 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள முச்சந்தியின் வலதுபுறத்தில் அமைந்துள்ள பாதையில் 1000 மீற்றர் தூரத்திலுள்ள ஏ. வீ. கருணாரத்ன என்பவரது இல. 75 ஹாரகம குருதெனிய வீடு வரை | 1% |
| 09 | பாதை இல. 04 II | ஹாரகம பஸ் தரிப்பிடத்தின் அருகிலிருந்து ஆரம்பித்து 300 மீற்றர் வரை | 1% |

9-457

---

**களனி பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி (குறைநிரப்பு துணை விதிகள்) சட்டம்*

***3 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9. 3 ஆம் பிரிவின் கீழ், எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி (குறைநிரப்பு துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 3 ஆந் திகதிய 2016/2849 ஆம் இலக்கத்தின் கீழ் பின்வரும் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி (குறைநிரப்பு துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 14.11.2014 ஆந் திகதிய 1888/47 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட சட்டத்தின் துணை விதிகள், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய மேல் மாகாண உள்ளூராட்சி சபைகளினால் அங்கீகரிக்கப்பட்டு 28.12.2015 ஆந் திகதிய 1947/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி (குறைநிரப்பு துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ், மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய அச்சொல்லப்பட்ட துணைவிதிகள் களனி பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் 01.01.2017 ஆந் திகதியிலிருந்து உரித்தாதல் வேண்டும் என 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9.3 ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கின்றேன்.*

*மேலும், தீர்மானம் எடுக்கும் இன்று முதல் களனி பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி (குறைநிரப்பு துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ், உரித்தாகி பயனுறுகின்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள பெயர்களின்கீழ் விபரிக்கப்பட்டுள்ள குறைநிரப்பு துணைவிதிகள், அக்குறைநிரப்பு துணைவிதிகளின்கீழ் அதுவரை நடைமுறையிலிருந்த செயன்முறைகள் வலுவற்றதாகும் விதத்தில் 31.12.2016 ஆந் திகதிக்குப் பின்னர் களனி பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்கு உரித்தாகாது எனவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9.3 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்மானிக்கின்றேன்.*

*செயலாளர் மற்றும் தத்துவங்களையும்
பணிகளையும் பொறுப்புக்களையும்
நிறைவேற்றுகின்ற அலுவலர்,
களனி பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,
களனி,
2016, ஓகத்து 03.*

**அட்டவணை**

*23.08.1988 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை*

| *துணை விதிகளின் இலக்கங்கள்* | *துணைவிதிகள்* |
|---|---|
| 11 | தங்கும் விடுதிகள் பற்றிய துணை விதி |
| 14 | ஹோட்டல்கள் பற்றிய துணை விதி |
| 16 | வெதுப்பகம் பற்றிய துணை விதி |
| 19 | மீன் விற்பனை பற்றிய துணை விதி |
| 20 | இறைச்சி விற்பனை பற்றிய துணை விதி |
| 21 | விரும்பத்தகாத மற்றும் பயங்கர வியாபாரங்கள் பற்றிய துணை விதி |
| 28 | உல்லாச வியாபாரிகள் பற்றிய துணை விதி |
| 39 | விளம்பர அறிவித்தல்கள் பற்றிய துணை விதி |

*9-461*

# நானாவித அறிவித்தல்கள்

## கண்டி மாநகர சபை

கண்டி மாநகர சபைக்கு உட்பட்ட அனுமதிக்கப்பட்ட வீதிகளில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களுக்கு அறவிடப்படும் கட்டணத் தொகை நியமிப்பு

252 ஆம் அதிகாரத்தின்படி கண்டி மாநகர சபை ஆணைச்சட்டத்தின் இல. 267 மற்றும் 272 ஆம் வாக்கியங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கண்டி மாநகரசபையில் 2002.05.26 ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தின் இல. 9 (122) இன் கீழ், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 2002.08.09 ஆந் திகதிய 1249 இலக்க, இலங்கை சோசலிச சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் IV (அ) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ள கண்டி மாநகரசபையின் துணைச் சட்டத்தின் III ஆம் பிரிவின்கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள வாகனங்கள் நிறுத்துவதற்கான துணைச்சட்டத்தின் நிபந்தனைகளின்படி 2015.10.14 ஆந் திகதிய இல. 8 (25) ஆம் சபைப் பிரேரணையில் அனுமதிக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் 2016.09.01 ஆந் திகதி தொடக்கம் அறவிடப்படும் என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

சந்தன தென்னகோன்,
விசேட ஆணையாளர்,
கண்டி மாநகர சபை.

கண்டி மாநகர சபை,
2016, ஓகத்து

அனுமதிக்கப்பட்ட வாகனம் நிறுத்தி வைப்பதற்கான கட்டணம்

(அ) அனுமதிக்கப்பட்ட வீதி (கொழும்பு வீதி தவிர)

(1) மோட்டார் வாகனம்/கெப் வாகனம்/வேன்/ஜீப் வாகனம் முதல் ஒரு மணித்தியாலயத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு (வரியுடன்) 30.00 ரூபா படியும் அதன் பின் அதிகரிக்கப்படும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் (வரியுடன்) 50.00 ரூபா படியும்.

(2) பஸ் வண்டி/லொறி/டிரெக்டர் வண்டி ஒரு மணித்தியாலத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு (வரியுடன்) 50.00 ரூபா படியும் அதன் பின் அதிகரிக்கப்படும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் (வரியுடன்) 75.00 ரூபா படியும்.

(3) முச்சக்கரவண்டி ஒரு மணித்தியாலயத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு (வரியுடன்) 30.00 ரூபா படியும் அதன் பின் அதிகரிக்கப்படும் ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் (வரியுடன்) 30.00 ரூபா படியும்.

(4) துவிச்சக்கர வண்டி ஒரு மணித்தியாலயத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு (வரியுடன்) 20.00 ரூபா படியும் அதன் பின் அதிகரிக்கப்படும் ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் (வரியுடன்) 10.00 ரூபா படியும்.

(ஆ) கொழும்பு வீதி

(1) மோட்டார் வாகனம்/கெப் வாகனம்/வேன்/ஜீப் வாகனம் முதல் ஒரு மணித்தியாலயத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு (வரியுடன்) 30.00 ரூபா படியும் அதன் பின் அதிகரிக்கப்படும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் (வரியுடன்) 50.00 ரூபா படியும்.

(2) பஸ் வண்டி/லொறி/டிரெக்டர் வண்டி ஒரு மணித்தியாலத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு (வரியுடன்) 50.00 ரூபா படியும் அதன் பின் அதிகரிக்கப்படும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் (வரியுடன்) 50.00 ரூபா படியும்.

(3) முச்சக்கரவண்டி ஒரு மணித்தியாலயத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு (வரியுடன்) 30.00 ரூபா படியும் அதன் பின் அதிகரிக்கப்படும் ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் (வரியுடன்) 30.00 ரூபா படியும்.

(4) துவிச்சக்கர வண்டி ஒரு மணித்தியாலயத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு (வரியுடன்) 20.00 ரூபா படியும் அதன் பின் அதிகரிக்கப்படும் ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் (வரியுடன்) 10.00 ரூபா படியும்.

9-456

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.